**மாதிரி வினாத்தாள்**

சுற்றுச்சூழல் பாதுகாப்பு - பகுதி I

10th Standard

**அறிவியல்**

Reg.No. :

I.அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
II.நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கு பயன்படுத்த வேண்டும்.
III.வினா எண் 14- ற்கு கண்டிப்பாக விடையளிக்கவும்.

Time : 01:00:00 Hrs

Total Marks : 35

## பகுதி - அ

6 x 1 = 6

1) பொருள்களின் தொகுப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன .இவற்றில் சிதைவடையும் பொருள்களைக் கொண்ட தொகுப்பினைத் தேர்ந்தெடுக்க .

(a) புல் ,மலர்கள் ,இலைகள் (b) புல் ,கட்டை மற்றும் பிளாஸ்டிக் (c) பழத்தோல் ,கேக் மற்றும் பிளாஸ்டிக்

(d) கேக் ,கட்டை மற்றும் கண்ணாடி

2) கீழுள்ளவற்றில் எது உணவுச் சங்கிலி ?

(a) புல் ,கோதுமை ,மா (b) புல் ,ஆடு ,மனிதன் (c) ஆடு ,பசு ,யானை (d) புல் ,மீன் ,ஆடு

3) இவற்றில் எவை சூழ்நிலையைப் பாதுகாக்கும் நடை முறைகள் ?

(a) பொருள்கள் வாங்குவதற்குத் துணிப்பையை எடுத்துச் செல்லுதல்

(b) பயன்படுத்தாதபோது மின் விளக்குகள் மின் விசிறிகளை அணைத்தல் (c) பொது போக்குவரத்தைப் பயன்படுத்தல்

(d) மேற்கண்ட அனைத்தும்

4) கறுப்பு தங்கம் என்றழைக்கப்படுவது எது ?

(a) ஹைட்ரோகார்பன்கள் (b) நிலக்கரி (c) பெட்ரோலியம் (d) ஈதர்

5) பசுமை வேதியியலினால் உண்டாகும் பொருளுக்கு எடுத்துக்காட்டு .

(a) பிளாஸ்டிக் (b) காகிதம் (c) உயிரி பிளாஸ்டிக் (d) ஹேலஜன் தீயணைப்பான்

6) ........பசுமையக வாயு வெப்பநிலை மாற்றம், புவி வெப்பமாதலை ஏற்படுத்துகிறது .

(a) ஹைட்ரஜன் (b) ஆக்சிஜன் (c) நைட்ரஜன் (d) கார்பன்டைஆக்சைடு

## பகுதி - ஆ

5 x 2 = 10

7) பின்வருவனவற்றை உற்பத்தியாளர்கள், பல வகையான நுகர்வோர்கள் ,சிதைப்பவைகள் என வகைப்படுத்துக . அ)வண்ணத்து பூச்சு ஆ)வெட்டுக்கிளி இ)ஓணான் ஈ)பாம்புகள் உ)செம்பருத்தி ஊ)நைட்ரோபாக்டிரியா

8) வாழிடத்தைப் பொறுத்து உரினங்கள் பல்வேறு தகவமைவுகளைப் பெற்றுள்ளன .
பின்வருவனவற்றை பொருத்துக

| | |
|---|---|
| (அ)மீன்கள் | இறகுகள் |
| (ஆ) ஒட்டகம் | தடித்த தோல் |
| (இ)தவளை | துடுப்பு |
| (ஈ)பறவைகள் | விரலிடை சவ்வுடைய பின்னங்கால்கள் |

9) பாக்டீரியங்களும் பூஞ்சைகளும் இறந்து போன அல்லது அழுகிய தாவர,விலங்குகளை பூமியில் சிதைக்க காரணமாகின்றன. சிதைந்த பொருள்கள் மறுசுழற்சிக்கு உட்படும்போது ,தாவரங்களின் வளர்ச்சிக்கு பயன்படுகிறது. இதை நாம் என்னவென்று அழைக்கலாம்.?

10) பின்வரும் பத்தியைப் படித்து தகுந்த விடையைக் கண்டறிந்து கோடிட்ட இடங்களை நிரப்புக (தீங்கு விளைவிப்பது, கன உலோகங்கள் , கார்பன்-டைஆக்ஸைடு , கந்தக துகள்கள் ) பாதரசம் ,யுரேனியம் ,தோரியம் ,ஆர்செனிக் ......கலந்த கலவையிலிருந்து வெளியேற்றப்படும். கழிவு பொருள்கள் மனிதனுக்கு ....மட்டுமின்றி சூழ்நிலையையும் பாதிக்கின்றது .நிலக்கரியில் உள்ள ..........அமில மழை உருவாக காரணமாவதோடு மட்டுமல்லாமல் ,பசுமையக வாயு ..........வெளியேற்றப்பட்டு காலநிலை மாறுபாட்டிருக்கும் புவி வெப்ப மாறுதலுக்குக் காரணமாகிறது.

11) பின்வருவனவற்றை பயன்படுத்தி உணவுச் சங்கிலியை உருவாக்குக .
பாம்பு, புல், தவளை, வெட்டுக்கிளி

## பகுதி - இ

4 x 5 = 20

12) அ)கீழுள்ள பொருளை வகைப்படுத்துக .கட்டை காகிதம்,பிளாஸ்டிக்,பற்கள் ஆ)உங்களுடைய வகைப் பாட்டிற்கான விளக்கத்தைத் தருக

13) உங்களுடைய பகுதியில் நீர்த் தட்டுப்பாட்டினால் மக்கள் அல்லல்படுகிறார்கள் .எனவே நீர்த்தட்டுப்பாட்டினைத் தவிர்க்க என்னென்ன முறைகளைக் கையாளுவீர்கள் ?

14) a) புகை ,புகை ,எங்கு நோக்கினும் புகை மண்டலம் .இச்சூழல் உடல் நலத்திற்கு ஏற்றதா என்பதை ஏற்றுக்கொள்கிறீர்களா ?

**(OR)**

b) கரியை எரிப்பதினால் ஏற்படும் தீமை பயக்கும் செயல்களைப் பட்டியலிடு .

*****************************************

QB365 QUESTION BANK 365 https://www.qb365.in